RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சம்பந்தர் தேவாரத்தில் சமண, பௌத்தத் துறவிகளது உணவு-சமூக, வரலாற்று நோக்கில்

சாந்தி மகாலிங்கசிவம் [அ, *], இரா. கோகுல் [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641020, தமிழ்நாடு, இந்தியா.

# Food of Jain and Buddhist monks at Sambandar Thevaram-From a social and historical perspective

**Shanthi Mahalingasivam [a, *], R. Gokul [a]**

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author: shanthimaha@gmail.com

Received: 14-04-2024
Revised: 18-06-2024
Accepted: 05-07-2024
Published: 01-08-2024

Check for updates

**ABSTRACT**

From the beginning of life till today, food occupies the first place among the basic needs of all living organisms. Hunger is a common emotion. Food is the medicine invented by man to alleviate the disease of hunger. This can be said to be "food is medicine". Generally, the food habits of the people of a land are based on the land they live in. In this context, if we take the case of Tamil Nadu, during the Sangam Age, the people who lived in harmony with nature, divided the land into five types, formulated disciplines accordingly and mentioned food as one of the themes of the five types of lands. With the advent of Jains and Buddhists, 'non-killing' was practised and the custom of eating vegetables became a favorite in the life of the people who enjoyed eating meat and toddy. The history of human beings shows that their food habits have changed from time to time. The social history of the people can also be known from their food. This study will look at the food and eating style of Jain and Buddhist monks through the Jain and Buddhist ideas found in the Thevaram Pathigams of Thirugnana Sambandar, the foremost leader of the Bhakti movement.

**Keywords:** Thirugnana Sambandar and the tenth song, the food and eating habits of Jain and Buddhist monks, Mustard and Sukkum, Those who do not eat dinner, eating vessel.

## முன்னுரை

ஐவகை நிலங்களாக நிலத்தினை வகுத்து, இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய சங்க கால மக்கள் ஊன் உணவையும் கள்ளையும் விருப்புடன் உண்டு வாழ்ந்துள்ளனர் என்பதனை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். சான்றாக சங்க இலக்கியமான நற்றிணையில் வரும்,

"உடும்பு கொளீஇ வரிநுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்
கொண்டி எல்லுமுயல் எறிந்த வேட்டுவன்" (நற்.59)

என்னும் பாடலடிகள் வாயிலாக, உடும்பு, நுணல், ஈயல், முயல் போன்றவற்றை வேட்டையாடி வரும் வேடுவனின் செயல் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு உண்டு, களித்து வாழ்ந்த மக்களது வாழ்வில் சமண பௌத்தரது வருகையினால் மாற்றம் ஏற்பட்டது. சமண, பௌத்தரது மாவிரதங்களில் ஒன்றான 'கொல்லாமை' தமிழக மக்களாலும் காலப்போக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமண, பௌத்தர்கள் பிறப்பினால் அனைவரும் சமமானவர்கள் என்ற கொள்கையை உடையவர்கள். ஆகவே இவர்களைத் தமிழகத்தார் இயல்பாக ஏற்றுக் கொண்டனர் எனலாம்.

பின்னர், கடும் துறவு, கட்டுப்பாடான பழக்க வழக்கங்கள் என்பவற்றினைத் 'தொடர்ச்சியாகப்' பின்பற்ற முடியாமல் மக்கள் தடுமாறித் தவித்த போது திருஞானசம்பந்தரது வருகை நிகழ்ந்தது. இம்மண்ணுக்கே உரிய வழிபாடு, மொழி, பண்பாடு போன்றவற்றைத் திருஞானசம்பந்தர் மீள்கட்டமைப்புச் செய்தார். சமண, பௌத்தத் துறவிகளை எதிர்த்துப் பாடல்கள் பல பாடி மக்கள் மனதில் மீண்டும் அவர்களது நில வழிபாட்டையும் பழக்கவழக்கத்தையும் பின்பற்ற வழிசெய்து கொடுத்தார் என்பது வரலாறு. இவரது பாடல்களில் காணப்படும் சமண, பௌத்தக் கருத்துக்கள் அடிப்படையில் அவர்களது உணவு பற்றி இவர் கூறியுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

## திருஞானசம்பந்தரும் பத்தாவது பாடலும்

தமிழைத் தனது ஆயுதமாகக் கொண்டு சமண பௌத்தர்களை எதிர்த்த திருஞானசம்பந்தர் கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரது பிறப்பு சமண, பௌத்தத்தை அழிக்கவே நிகழ்ந்தது எனச் சேக்கிழார் பெரிய புராணத்தில்[2] கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் பாடிய பதிகங்களில் வரும் பத்தாவது பாடல்தோறும் சமண, பௌத்தரை மிகக் கடுமையாகச் சாடியுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. பத்தாவது பாடல்களில் இவர் சமண, பௌத்தர் உண்ணும் உணவு பற்றியும் உண்ணும் முறை பற்றியும் உண்கலம் பற்றியும் பதிவு செய்து உள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகக் காணப்படுகிறது.

## சமண, பௌத்தத் துறவிகளது உணவும் உண்ணும் முறையும் உண்கலமும்

சமண பௌத்தத் துறவிகளின் வாழ்வியலில் அவர்களுக்கு உணவு இலகுவாகக் கிடைக்கவில்லை. அலைந்து திரிந்து தமக்குரிய உணவினைப் பிச்சையாக ஏற்று அவர்கள் உயிர் வாழ்ந்துள்ளனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. சான்றாக, காவிரிப்பூம்பட்டினத்து பல்லவனீச்சரத் தலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தில்,

"உண்டு உடுக்கை இன்றியே நின்று

ஊர் நகவே திரிவார்

கண்டு உடுக்கை மெய்யில் போர்த்தார்

கண்டு அறியாத இடம்" (1:65:10)

என்று கூறுவதிலிருந்து, உடையின்றி உணவினையே பெரிதாகக் கொள்ளும் சமணர்கள் ஊர்தோறும் உணவுக்காக அலைந்து திரிவார்கள். ஆடையைப் போர்த்தித் திரியும் புத்தரும் இவ்வாறே என இவர்களை நிந்திக்கிறார்என்று அறிய முடிகிறது.

உணவு தேடி, உணவுப்பிச்சை வாங்குவதற்காக சமண, பௌத்தத் துறவிகள் அலைந்து திரிந்து உணவினைப் பெற்றுள்ளார்கள் என்பதனை அறியக் கூடியதாக இருக்கிறது.

மேலும் இவர், கீழைத் திருக்காட்டுப்பள்ளித் தலத்தில் பாடிய பதிகத்தில்,

உச்சிக்கொளாமை உண்டே உரைக்கும் குண்டர்களோடு' (1:5:10)

என்று கூறுவதிலிருந்து உயர்வற்ற உணவினை மிகுதியாக மதியத்துக்குள் உண்டு இருக்கும் குண்டர்களாகிய சமணர்கள், மதியத்துக்குள் உணவினை உண்டு விட வேண்டும். அதன் பின்னர் அவர்கள் உண்ண மாட்டார்கள். மீண்டும் மறுநாள் காலையில் தான் பிச்சை எடுத்து உண்பார்கள் என்பதனைத் திருஞானசம்பந்தர் தன் பதிவு மூலம் உறுதிப்படுத்துகிறார்.

ஒரு நாளைக்கு ஒருவேளை மாத்திரமே உணவு உண்ணும் பழக்கம் இத்துறவிகளிடையே காணப்பட்டுள்ளது[3] என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து,

"நாணாது உடைநீத் தோர்களும் கஞ்சி நாட்காலை

ஊணாப் பகல் உண்டு ஓதுவோர்கள் உரைக்கும் சொல்" (1:98:10)

என்ற பாடல் அடிகள், நாணத்தை ஒழித்து உடையை விட்டோர்களும் கஞ்சியை விடியற்காலை உணவாகவும் பகல் உணவாகவும் உண்டு ஓதுபவர்களும் கூறும் சொற்களைப் புறந்தள்ளி விடுங்கள் எனக் கூறுகிறார். இதன்மூலம் சமண, பௌத்தத் துறவிகளின் உணவு உண்ணும் காலத்தினை திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். விடியற்காலையில் அல்லது பகல் அதாவது மதியத்திற்கு முன் உணவினை உண்டு முடிப்பவர்கள் என்பதனைக் கூறுகின்றார்.

மேலும் இவர், திருவிசயமங்கை என்ற தலத்தில் பாடிய பாடலடி,

'கஞ்சியுங் கவளமுண் கவணர்' (3:275:10)

என்பதிலிருந்து, கஞ்சியும் கவளமும் தமது உணவாகக் கொண்டு வாழ்கின்ற புறச்சமயத்தார் என அவர்களது உணவாகக் கஞ்சியையும் சோற்றுக் கவளத்தையும் பதிவு செய்கிறார்.

விடிகாலையில் பிச்சைக்குச் செல்லும் இவர்களுக்குக் கஞ்சியும் சில நேரங்களில் சோற்றுக் கவளமும் பிச்சையாக இடப்படும். கைகளிலே உணவை வாங்கி உண்ணும் சமண துறவிகளுக்கு கைகளில் சோற்றுக்கவளத்தினை வாங்கி உண்ண முடியும். ஆனால் தனது பெரும்பான்மையான பாடல்களில் திருஞானசம்பந்தர் கஞ்சியை இவர்கள் உண்ணுவதாகக் குறிப்பிட்டுள்ளார். கஞ்சியை கையில் வாங்கி நின்றபடி உண்ண முடியுமா? கஞ்சி நீர்த்தன்மை உள்ள உணவு; அப்படியாயின் எவ்வாறு இவர்கள் கஞ்சியைக் கையில் வாங்கி இருப்பார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

கஞ்சி என்பதை இன்று உணவாக உட்கொள்ளும் கஞ்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது என்பது தெட்டத் தெளிவாகிறது. கஞ்சி என்பது விடிகாலையில் செய்யப்பட்ட உணவாக இருக்க வாய்ப்பில்லை. அதனால் முதல் நாள் மீதமாகி இருக்கின்ற சோற்றில் அளவாகத் தண்ணீர் விட்டு அதனைப் பிச்சையாக இட்டிருப்பார்கள் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேலும் இவரது,

'கையில் உண்டுழல் வாரும்' (2:142:11)

'இருந்து உண்தேரரும் நின்றுண் சமணும் எடுத்தார்ப்ப' (1:99:10)

'நின்றுணும் சமணும் இருந்துணும் தேரரும்' (3:381:10)

என்பன போன்ற பாடலடிகள் விளக்குவது, கையில் உணவினை ஏந்திக் கொண்டு திரியும் சமணர்; என்பதிலிருந்து சமணத் துறவிகள் மக்களிடம் எடுக்கும் பிச்சையினைத் தமது கைகளில் ஏந்திக் கொண்டு உள்ளார்கள் என்பதனை இவர் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

அதாவது தமது இரண்டு உள்ளங் கைகளையும் விரித்து அதற்குள் இடப்படும் உணவினையே சமணர்கள் பிச்சையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதற்கு மேல் அவர்கள் பிச்சை ஏற்றதும் இல்லை; உட்கார்ந்து உண்டதுமில்லை; இரண்டு கைகளிலும் கிடைத்த பிச்சையை நின்றபடியே உண்டுள்ளனர். இவர்கள் வசம் உணவு உண்பதற்குரிய பாத்திரம் இல்லை என்பதனை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பிச்சை ஏற்கப் போகும் போது கிடைத்த உணவினை எங்கு பிச்சை வாங்கினார்களோ அந்த இடத்தில் நின்றபடியே உண்டு முடித்து, தான் வசிக்கும் குகைக்குத் திரும்பும் சமணத் துறவிகள் மீண்டும் மறுநாள் அதிகாலையில் தான் பிச்சைக்குச் செல்வார்கள்.

அளவோடு உண்ணலே ஆன்மீக சாதனை செய்பவனுக்குரியதாகும் தேவையை மீறி உண்ணக் கூடாது என்பதால்தான் நின்றபடியே, கைகளில் உணவை வாங்கி உண்கிறார்கள் சமணத்துறவிகள் என்கிறார் முனி ஸ்ரீ 108 ப்ரமான் சாகர் மஹராஜ்[4]

சமண, பௌத்தத் துறவிகளின் ஒழுக்கங்களில் பிச்சை ஏற்று உண்பது ஒன்றாகக் காணப்படுகின்றது. எடுத்த பிச்சையினை நின்றபடியே உண்ண வேண்டும் என்பது சமணர்தம் கொள்கைகளில் ஒன்றாக உள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்துள்ளோம். அதே நேரத்தில் தேரர்கள் எனச் சொல்லப்படும் பௌத்தத் துறவிகள் தாம் பிச்சை எடுத்த உணவினை இருந்து (அமர்ந்து) உண்பவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.

மேலும், திருவூறல் என்ற தலத்தில் திருஞானசம்பந்தர்,

'பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையார்

மோட்டு அமணர் குண்டர்' (1:106:10)

என்ற அடிகள் மூலம், பொன் போன்ற வண்ணமுடைய காவியுடை அணிந்தவர்களும் புளித்த பழைய சோற்றைத் தட்டிலே வாங்கி அருந்துபவர்களும் அறிவில்லாத அமணர்களும் குண்டர்களும் என்கிறார். இதிலிருந்து பிச்சையாக இவர்கள் புளித்த பழைய சோற்றினைக் கூட ஏற்று உள்ளார்கள் என்பதனை அறியக் கூடியதாக இருக்கிறது.

உடல் நலத்துக்கு உகந்ததாக பழைய சோறு உண்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றித் தற்காலத்தில் மருத்துவர்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

அலைந்து திரிந்து ஒரு நாளில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை மாத்திரம் உண்டு, சில நாட்களில் உணவு அருந்தாமல் நீரை மாத்திரம் அருந்தி நோன்பு நோற்கும் துறவிகளுக்கு உரிய வலுவை இவர்கள் உண்ட பழைய சோறும் கஞ்சியும் கொடுத்திருக்கின்றது என்பது அறிவுகூரத்தக்கதாகும்.

## கடுக்காயும் சுக்கும்

கடுக்காய் மருத்துவ குணங்கள் பலவற்றைக் கொண்டது. சித்த வைத்தியத்தில் கடுக்காய்க்கு மிகப்பெரிய இடமுண்டு. "தாயிலும் சிறந்ததாகக் கடுக்காயைச் சொல்வார்கள்". "அறுசுவையும் உடையது கடுக்காய். நமது உடலினை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்கும் வயிற்றினை சுத்தப்படுத்துவதற்கும் பற்சுத்தத்துக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் கடுக்காய் மிகப்பெரிய அளவில் உதவுவதாக மருத்துவர் கு. சிவராமன்"[5] கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மிகச் சிறப்பு வாய்ந்த கடுக்காயைச் சமணத் துறவிகள் உட்கொண்டார்கள் என்பதனை திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் பதிவு செய்துள்ளமை மிகச் சிறப்பான ஒன்றாகக் காணப்படுகிறது. சான்றாகப் பாடலடி வருமாறு,

'கையில் உண்ணும் கையரும்

கடுக்கள்தின் கக்களும்' (3:311:10)

எனக் கூறுவதிலிருந்து, கைகளில் உணவை வாங்கி உண்ணும் சமணர்கள் கடுக்காயையும் உண்பவர்கள் என்கிறார். சமண பௌத்தர்களின் வாழ்வியலில் கடுக்காய் உண்பது என்பது ஒரு வழக்கமாகவே இருந்துள்ளது.

மேலும், திருவைகல் மாடக்கோயில் என்ற தலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்திலிருந்து,

'கடுவுடை வாயினர் கஞ்சி வாயினர்

பிடகுரை பேணிலார்' (3:276:10)

என்று கூறுவதிலிருந்து, கடுக்காயை உண்பவர்களும் கஞ்சியைக் குடிப்பவர்களும் எனக் கூறுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தக்கடுக்காயை உண்பதன் மூலம் அவர்கள் தம் உடலினை ஆரோக்கியமாக வைத்திருந்தனர் என்பதனை அறிய முடிகிறது.

மேலும் இவர், திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் என்ற இடத்தில் பாடிய பதிகத்தில்,

“நாளும்

இடு துவர்க்காயொடு சுக்குத் தின்னும்

நிலை அமண் தேரரை நீங்கி நின்று,

நீதர் அல்லார் தொழும்' (1:6:10)

என்று கூறுவதிலிருந்து, கடுக்காயையும் சுக்கையும் தின்னுகின்ற அமணர்கள் எனப் பதிவு செய்துள்ளார்.

திரிகடுகம் என்ற நூலின் ஆசிரியரான நல்லாதனார் சுக்கின்[6] பயனைப் பற்றிக் குறிப்பிடுவது வருமாறு, வயிறு எரிச்சல் நீங்கும், மூட்டு வலிகள் நீங்கும், இருமல் குணமாகும், தலைவலி பாரம் குறையும், வாயின் துர்நாற்றங்கள் நீங்கும்.

சமணர்கள் கொல்லாமை என்ற மாவிரதத்தைக் கைக்கொள்வதன் காரணமாக, நீராடுதலையும் பற்களைச் சுத்தம் செய்வதனையும் தவிர்த்து விடுவார்கள்.[7] இதனால் உடலில் ஏற்படும் பிணிகளை நீக்கச் சுக்கையும் கடுக்காயையும் இவர்கள் பாவித்திருக்கலாம்.

## இரவு உணவினை உண்ணாதோர்

இரவு உணவினை நேரம் தாழ்த்தி எடுக்கக் கூடாது என்பதும் மாலை ஏழு மணிக்கு முன்னர் இரவுணா அருந்துவது சிறப்பானது என்பது அறிவியல் ஆகும். தற்காலத்து மருத்துவர்கள் ஆலோசனையும் இதுவாகும்.

திருஞானசம்பந்தர் வாழ்ந்த சமகாலத்தில் வாழ்ந்த சைவ அடியார்களில் மூத்தவரான திருநாவுக்கரசரது பதிவு மூலம் சமண, பௌத்தர்கள் இரவு உணவினை உண்ணாது விலக்குவார்கள் என்பதும் இது இவர்களது சமய நெறியில் காணப்படும் ஒழுக்கங்களில் ஒன்றாகவும் கூறப்படுகிறது.

திருநாவுக்கரசர் திருவாரூர் (1) தலத்தில்,

‘மற்றிடம் இன்றி மனைதுறந்து

அல்லுணா வல்லமணர்

சொற்றிடம் என்று துரிசுபட்

டேனுக்கும் உண்டு கொலோ' (4:101:2)

என்று பாடுவதன் மூலம், தமது மனையைத் துறந்து இருக்க இடம் இன்றி அலைந்து திரியும் அமணர்கள் இரவில் உணவினை உண்ணாதவர்கள் என அவர்களது பழக்க வழக்கத்தினைப் பதிவு செய்துள்ளார்.

மேலும் இவர் திருநாகைக்காரோணம் (2) என்னும் தலத்தில்,

‘மனை துறந்து அல்லுணா வல்லமண்

குண்டர் மயக்க நீக்கி' (4:103:6)

எனக் கூறுவதிலிருந்து, தம் இல்லத்தினைத் துறந்தும் இரவு உணவையும் துறந்தும் வாழ்கின்ற வலிமைமிக்க அமணர்கள் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

சமணத் துறவிகள் இரவு உணவினை உண்ணாமைக்கு முக்கிய காரணமாக, அந்தக் காலகட்டத்தில் இரவில் வெளிச்சத்துக்காக விளக்கினைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. இவ்வாறு இரவில் விளக்கினைப் பயன்படுத்துவதனால் விளக்கை நோக்கி வருகின்ற விட்டில் பூச்சிகள் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. அதுமட்டுமின்றி நிலவொளியில் சென்று இவர்கள் பிச்சையை ஏற்றாலும் இவர்கள் உண்ணும் உணவில் இவர்களை அறியாமல் சில நுண்ணுயிர்கள் விழுந்து கொள்ளலாம். அதனை அறியாத இவர்கள் உண்ணும் போது கொல்லாமை என்ற மாவிரதத்தைக் கடைபிடிக்கத் தவறி விடுவார்கள் என்ற ஒரு காரணமும் இவர்கள் இரவு உணவு உண்ணாமைக்குக் காரணமாகக் கூறலாம்.

சமணர்கள் பொதுவாகவே கதிரவன் மறைந்து, ஒரு நாழிகைக்குள் இரவு உணவை உண்டு விடுவார்கள். அதன் பின்னர் உண்ண மாட்டார்கள் .பொதுவாகவே இரவு உணவு உண்ணும் இந்த முறை சமண நெறியினைப் பின்பற்றும் இல்லறவாசிகளுக்கும் பொருத்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## உண்கலம்

திருஞானசம்பந்தரின் தேவாரத்தின்வழி ஆய்ந்தபோது சமணத் துறவிகளிடம் உண்கலம் எதுவுமில்லை என்பதையும் உணவினைக் கைகளில் ஏந்தி நின்றபடி உட்கொண்டதனைப் பதிவு செய்துள்ளமையை அவதானிக்கலாம். ஆனால் சாக்கியர்கள் எனச் சொல்லப்படும் பௌத்தர்கள் தமது பிச்சைக்கான உணவினை மண்டை எனச் சொல்லப்படும் ஒரு பாத்திரத்தில் ஏற்று ஓரிடத்தில் அமர்ந்து உட்கொண்டார்கள் என்பதையும் இவர் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவர் திருஅரிசிற்கரைப் புத்தூர் என்ற தலத்தில்,

‘கையார் சோறு கவர்குண்டர்களும் துவருண்ட

மெய்யார் போர்வை மண்டையர் சொல்லு

மெய்யல்லபொய்யா’ (2:199:10)

என்றும்.

’அனமிகு செல்கு சோறு கொணர்கென்று கையில்

இடவுண்டு பட்ட அமணும்

மனமிகு கஞ்சி மண்டை அதிலுண்டு தொண்டர்

குணமின்றி நின்ற வடிவம்’. (2:220:10)

என்ற பாடல்கள் மூலம், குண்டர்களும் அமணர்களும் சோற்றினைக் கையில் வாங்கி உண்ணுவார்கள். பனைமட்டையால் அமைக்கப்பட்ட உண்கலத்தில் இடப்படும் சோற்றினையும் கஞ்சியையும் உண்டு வாழ்ந்த தேரர்களும் என்கிறார். இதிலிருந்து பௌத்தத் துறவிகள் பிச்சையினைக் கைகளில் வாங்குவதில்லை அதற்கென வைத்திருக்கும் ’மண்டை’ எனப்படும் பாத்திரத்தில் உணவினை வாங்கி உண்டார்கள் என்பதனை இவரது பாடல்கள் பதிவு செய்திருக்கிறது.

மண்டை என்ற உண்கலம் பனைமட்டையால் செய்யப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. பனைப் பொருட்களின் பயன் மனிதனது உடல் நலத்தினைப் பாதுகாக்கிறது என்பது தொன்மை வரலாறாகும்.

வெப்ப மண்டலத்தில் வாழும் சமண, பௌத்தத் துறவிகள் அவர்களது உடல் வெப்பத்தினைத் தாக்குப் பிடிப்பதற்கு ஏற்றவாறு தமது நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உடலில் நீர்ச் சத்து

குறையாமல் இருக்கவும் தாமே உறியினைக் கட்டி நீரைத் தூக்கிச் சென்றுள்ளார்கள். இதனை திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பதிவு செய்துள்ளார்.

திருவேடகம் என்ற தலத்தில்,

'குண்டிகைக் கையினர் குணமலாத் தேரர்கள்

பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்' (3:290:10)

என்றும்,

திருக்கானப்பேர் தலத்தில்,

'உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி

பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்

மறித்தலை மடபாபிடி' (3:284:10)

என்றும்,

திருச்சிவபுரம் (2) என்ற தலத்தில்,

'மண்டையிற் குண்டிகை மாசுதரும்

மிண்டரை விலக்கிய' (1:112:10)

என்றும் பாடியுள்ளார்.

அதாவது, குண்டிகையைக் கையில் வைத்திருப்பவர்கள், உறியோடு சுரையையும் குண்டிகையையும் பிடித்து நடப்பவர்கள் எனப் பதிவு செய்துள்ளார்.

சுரைக்காயைப் பாத்திரமாக்கி அதில் தண்ணீரை எடுத்துச் சென்று உள்ளனர் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, உண்கலமாக மண்டை எனச் சொல்லப்படும் கலத்தினையும் நீர் அருந்துவதற்காக குண்டிகை எனச் சொல்லப்படும் கலத்தினையும் கொண்டவர்கள் சமண, பௌத்தர்கள் என்கிறார்.

## முடிவுரை

திருஞானசம்பந்தர் தேவாரத்தின் மூலம் சமண, பௌத்தத் துறவிகளின் உணவு பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. துறவிகள் உண்ட உணவானது அவர்களது நிலம் சார்ந்த பண்பினை எடுத்துக் காட்டுகிறது எனலாம். அங்கு வாழ்ந்த மக்கள் அன்னதானம் இட்டு வாழ்ந்துள்ளனர். வெப்பப் பகுதிகளில் வாழும் இத்துறவிகளுக்கு ஏற்ற உணவாக கஞ்சியும் புளித்த சோறும் சில இடங்களில் நெய் கலந்து சோறும் மக்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்துறவிகள் கடுக்காய், சுக்கு போன்றவற்றை உண்டதாகவும் பதிவு செய்துள்ளார் திருஞானசம்பந்தர். உண்ணும் உணவின் மூலம் தமது உடல் ஆரோக்கியத்தைப் பேணி உள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மேலும் வெப்ப காலத்தில் உடலில் நீர்ச் சத்துக் குறைபாடு ஏற்படாமல் இருப்பதற்காக இவர்கள் தம்முடன் நீரைச் சுமந்து அறிந்து கொள்ள முடிகிறது. தமது வாழ்க்கைக்கு உடல் வலிமை முக்கியம் என்பதனை உணர்ந்த துறவிகள் அதற்கேற்றவாறு உணவினை உண்டு வாழ்ந்துள்ளனர். அங்கு வாழ்ந்த மக்களும் இவர்களது துறவு வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்துள்ளார்கள் என்பதையும் தேவாரத்தின்வழி அசென்றுள்ளமையையும்றியக் கூடியதாக இருக்கிறது. இக்கட்டுரை மூலம் தமிழகத்தில் சமண,பௌத்தத் துறவிகள் உண்ட உணவுகள்,உண்கலம்,உண்ணும் முறை என்பன பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத்தின்வழி ஆய்ந்துணரப்பட்டது.

குறிப்பு

** திருஞானசம்பந்தர் தேவாரம், திருநாவுக்கரசர் தேவாரம் - புலவர் பி.ரா. நடராசன் (உரை) பயன்படுத்தப்பட்டது.

## References


நற்றிணை(மூலமும் உரையும்),முனைவர்கு.வே பாலசுப்பிரமணியன்(உரை), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்லிமிடெட், சென்னை 98, முதற் பதிப்பு ஏப்ரல் 2004,

பெரியபுராணம் தொகுதி 3, கவிஞர் வ. த.இராமசுப்பிரமணியம்(உரை), திருமகள் நிலையம், சென்னை 17, முதற்பதிப்பு டிசம்பர் 2002 ,பக்க எண் 61.

சமணமும் தமிழும்,மயிலை சீனி வேங்கடசாமி, திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம், சென்னை 1, முதற்பதிப்பு நவம்பர் 1954 , பக்க எண் 17

கேள்வி - பதில் நிகழ்வில்(hindi) YOUTUBE Video (Best of Shanka Samad) https://youtu.be/lKAHN9J6LkY?si=JZVdwQJsPUQ2nEN-

சித்த வைத்தியர் டாக்டர் கு. சிவராமன் உரையிலிருந்து (youtube) https://youtu.be/FQ4652JBvvI?si=ydzTnu1832BCJEMS

கடுகங் கடிகை மாமூலம்திரிகடுகம், வித்துவான் திரு பு.சி புன்னைவனநாதன்(உரை),திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம் லிட். சென்னை 1, முதற்பதிப்பு அக்டோபர் 1936.

சமணமும் தமிழும்,மயிலை சீனி வேங்கடசாமி, திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம், சென்னை 1, முதற்பதிப்பு நவம்பர் 1954 , பக்க எண் 25.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License